**செ. கு. எண்:146** **நாள்: 06.10.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 6.10.2017</u>

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், போகனப்பள்ளி தரப்பு, தண்டேகுப்பம் கிராமத்தில் **5.10.2017** அன்று அதிகாலை மழையின் காரணமாக வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் வீட்டினுள் உறங்கி கொண்டிருந்த திரு. கூக்கையன் என்பவரின் மனைவி திருமதி ராதா, திரு. கூக்கையன் என்பவரின் மகள் செல்வி புஷ்பா, திரு. வெங்கடசாமி என்பவரின் மகன்கள் திரு. வசந்த குமார், செல்வன். பகவதி (எ) சந்துரு மற்றும் செல்வி. முல்லையரசி ஆகிய ஐந்து நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மேற்கண்ட 5 நபர்களின் குடும்பத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா நான்கு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**